செ.வெ.எண்: 322 நாள்: 17.05.2018

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர் மற்றும் புளியங்குடி நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கான ஒரு நாள் புத்துணர்வு பயிற்சி முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் துப்புரவு பணியாளர்களுக்கு வேட்டி சேலைகளை வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி மற்றும் கடையநல்லூர் நகராட்சி பணியாளர்களுக்கு ஒருநாள் புத்துணர்வு முகாம் புளியங்குடி நகராட்சி கோட்ட மலையாறு பகுதியில் நடைபெற்றது.இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப்நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு துப்புரவு பணியாளர்களுக்கு வேட்டி சேலைகளை வழங்கினார். வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மனோகரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள் பேசியதாவது:

சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்துவதில் துப்புரவு பணியாளர்களின் பங்கு அவசியமானதாகும் துப்புரவு பணியாளர்கள் 100 சதவீதம் சிறப்பாக பணியாற்றினால் அனைத்து பகுதிகளும் தூய்மையாக அமையும்.துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகளின் வாழ்கைத்தரத்தினை உயர்திடும் வகையில் நமது புராஜெக்ட் விங்ஸ் திட்டம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் மூலம் துப்புரவு தொழிலாளர்கள் குழந்தைகள் மற்றும் வாரிசுகளுக்கு தனித்திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களின் வேலை வாய்ப்புகள் வழங்கலாம். மேலும் கடனுதவி பெற்று தொழில் தொடங்கவும் உதவிகள் செய்யப்பட்டுள்ளது. துப்புரவு தொழிலாளர்களின் அடுத்த தலைமுறையினர் மற்ற வேலை வாய்ப்பை பெறும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5000 நபர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

20க்கும் மேற்பட்ட பெண்களுக்கு தையல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 8 நபர்களுக்கு தனியார் நிறுவணத்தின் மூலம் வேலைவாய்ப்பும் கிடைக்கபெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் துப்புரவு பணியாளர்களின் அடுத்த தலைமுறையினர் வேறு பணிவாய்ப்புகளை பெற்று சென்று வாழ்க்கை தரத்தினை உயர்த்தி கொண்டு சிறப்படையும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. என பேசினார்.

இக்கூட்டத்தில் புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திரு.க.பவுன்ராஜ் புளியங்குடி நகர காவல் ஆய்வாளர் திரு.கே.ஆடிவேல், நகராட்சி பொறியாளர் திருமதி. புஷ்பலதா,சுகதார அலுவலர்கள் திரு.ஜெயபால் மூர்த்தி, திரு.சீனிவாசன் மற்றும் துப்புரவு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி